**Eastern University, Sri Lanka**

**Faculty of Commerce and Management**

**External Degree**

**Part III Examination in Business Administration -2009/2010 (Sep 2014)**

**(Proper/Repeat)**

**EXB 401(b) Taxation**

13 OCT 2014

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக நேரம் : 02 மணித்தியாலங்கள்

எடுகோள்கள் ஏதும் இருப்பின் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்

---

01. கல்முனையிலுள்ள "சிவா ஸ்ரோர்ஸ்" எனும் பல்பொருள் வியாபார நிலையம் அதன் முன்னாள் உரிமையாளரான சிவானந்தம் அவர்களால் 1990 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும். இதனை அவர் அவரது ஒரே மகனான சிவரூபனுக்கு மரணசாசனம் மூலம் 2009 ஆம் ஆண்டு வழங்கியுள்ளார். "சிவா ஸ்ரோர்ஸ்" வியாபாரத்திலிருந்து திரு.சிவரூபன் வ/ஆ 2012/2013 க்கு ரூ.176,4000 வினை தேறிய இலாபமாகப் பெற்றுள்ளார்.

குறிப்புக்கள்

1. தேறிய இலாபமானது பின்வரும் இலாபங்களையும் உள்ளடக்கியுள்ளது:
   (அ) தேறிய வட்டி ரூ.108,000
   (ஆ) வான் விற்பனை இலாபம் ரூ.150,000
   (இ) மொத்த களஞ்சிய வாடகை ரூ.100,000

2. காணிகட்டட ஆரம்ப மீதி ரூ.1,950,000 ஆகும். இவை 1990 இல் கொள்வனவு செய்யப்பட்டவையாகும். இவர் இவ்வாண்டு ரூ.550,000 செலவில் ஒரு புதிய கட்டடத்தை கட்டி முடித்து வேறொருவருக்கு களஞ்சிய தேவைக்காக ஆண்டுக்கு ரூ.100,000 க்கு வாடகைக்கு கொடுத்துள்ளார்.

3. மோட்டார் வாகனங்கள் ஆரம்ப மீதி 01.04.2012 இல் ரூ.2,000,000. இது வ/ஆ 2010/2011 இல் ரூ.1,000,000 வுக்கு கொள்வனவு செய்யப்பட்ட லொறி ஒன்றையும் வ/ஆ 2008/2009 இல் ரூ.600,000 வுக்கு கொள்வனவு செய்யப்பட்ட வினியோகவான் ஒன்றையும் மேலும் கார் ஒன்றையும் உள்ளடக்கியுள்ளது. மேற்படி வான் கடந்த 30.03.2013 அன்று விற்பனை செய்யப்பட்டு, 31.03.2013 அன்று ரூ.1,000,000 க்கு ஒரு புதிய வான் கொள்வனவு செய்யப்பட்டு அன்றைய தினமே வியாபாரத்தில் பயன்படுத்தப்பட்டது. விற்பனை செய்யப்பட்ட வானுக்கான மொத்த தேய்மான ஏற்பாடு ரூ.250,000 ஆகும்.

4. தளபாடம் ஆரம்ப மீதி ரூ.100,000 பெறுமதியானதாகும். இது வ/ஆ 2009/2010 இல் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்களையும் கொண்டுள்ளது. இவ்வாண்டு ரூ.40,000 பெறுமதியான புதிய தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வியாபாரப் பாவனைக்கு பயன்படுத்தப்பட்டன.

5. இவ்வாண்டுக்கான பெறுமானத்தேய்வு ஏற்பாடு பின்வருமாறு:

| | ரூபா |
|---|---|
| கட்டடம் | 55,000 |
| மோட்டார் வாகனம் | 350,000 |
| தளபாடங்கள் | 14,000 |
| மொத்தம் | 419,000 |

6. அறவிடமுடியாக் கடன் ஒதுக்கக் கணக்கு

| | ரூபா | ரூபா | | ரூபா | ரூபா |
|---|---|---|---|---|---|
| கடன்பட்டோர் கணக்கு | | 10,000 | மீ/கீ/வ: பொது | 110,000 | |
| மீ/கீ/செ: | | | விசேடம் | 70,000 | 180,000 |
| பொது | 155,000 | | காசுக்கணக்கு | | 30,000 |
| விசேடம் | 85,000 | 240,000 | இ/ந. க/கு | | 40,000 |
| | | 250,000 | | | 250,000 |

(அ) விசேட ஒதுக்கம் பின்வருமாறு உள்ளது:

| | ஆரம்ப மீதி | | இறுதி மீதி |
|---|---|---|---|
| | ரூபா | | ரூபா |
| கமல் | 50,000 | கமல் | - |
| விமல் | 20,000 | விமல் | 20,000 |
| | 70,000 | இக்பால் | 40,000 |
| | | பண்டா | 25,000 |
| | | | 85,000 |

(ஆ) இவ்வாண்டு அறவிடமுடியாக்கடன் ஏற்பாடு ரூ.40,000.

(இ) ரூ.30,000 அறவீடு முந்திய ஆண்டுகளில் பதிவழிக்கப்பட்ட ஒரு கடனைக் குறிக்கின்றது. இவ்வாண்டு நிசாரிடமிருந்து கிடைக்கவேண்டிய ரூ.10,000 பதிவழிக்கப்பட்டது.

7. சிவரூபன் 01.10.2011 அன்று டிப்பர் வாகனமொன்றை மூன்று வருட குத்தகைக்கு பெற்றுள்ளார். இதற்கான குத்தகை வாடகை (மாதம்) ரூ.20,000 ஆகும். இலாபநட்டக் கணக்கின் படி இவ்வாண்டு செலுத்திய வாடகை ரூ.240,000 ஆகும்.

8. மொத்த கட்டடத் திருத்தச் செலவும் சோலைவரியும் ரூ.90,000 ஆகும். இதில் 15% வாடகைக்கு விடப்பட்ட கட்டடத்துக்குரியதாகும்.

9. இலாப நட்டக் கணக்கில் காட்டப்பட்டுள்ள அன்பளிப்புத் தொகை ரூ.400,000 ஆகும். இத் தொகை பின்வருமாறு வழங்கப்பட்டிருந்தது:

| | ரூபா |
|---|---|
| ஜனாதிபதி நிதியத்துக்கு பணமாக | 275,000 |
| மங்கயற்கரசியர் அறநிலையத்துக்கு புத்தாடைகள் அன்பளிப்புச் செய்தது | 125,000 |
| | 400,000 |

10. காப்புறுதி ரூ.300,000 ஆகும். அதாவது:

| | ரூபா |
|---|---|
| சிவரூபனின் ஆயுள் காப்புறுதிப்பூட்கை | 200,000 |
| 'சிவா ஸ்ரோர்ஸ்'' தீக்காப்புறுதி | 100,000 |
| | 300,000 |

11. இவ்வாண்டுக்கான மொத்த விற்பனைப் புரள்வு ரூ.99,000,000 ஆகும். ஒவ்வொரு காலாண்டுக்கும் சராசரியாக ரூ.24,000,000 க்கு மேல் விற்பனை இடம்பெறுவதாகக் குறிப்பிடுகின்றார். இவ்வாண்டு செலுத்திய (இலாபநட்ட கணக்கின்படி) தே.க.வரி (NDB) ரூ.165,000 ஆகும்.

12. தொலைபேசி, மற்றும் மின்கட்டணம் ரூ.130,000 ஆகும். இதில் 20% சிவரூபனின் தனிப்பட்ட (வீட்டு) பாவனைக்குரியவையாகும்.

13. மோட்டார்வாகன திருத்தச் செலவு ரூ.125,000 ஆகும். இது கார் திருத்தச் செலவான ரூ.20,000 யும் உள்ளடக்கியுள்ளது.

14. வ/ஆ 2010/2011 இல் சிவரூபன் தனது வியாபாரம் மூலம் அடைந்த நட்டத் தொகை ரூ.600,000 ஆகும். இதில் ஈடுசெய்யப்படாத நட்டமாக ரூ.195,000 இவ்வாண்டுக்கு கீழ்க்கொண்டுவரப்பட்டுள்ளது.

15. சிவாஸ்ரோஸின் 31.03.2013 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாபநட்டக்கணக்கில் செலவுகளுள் பின்வரும் விடங்களும் உள்ளன.

| | ரூபா |
|---|---|
| விளம்பரம் | 150,000 |
| கேளிக்கைச் செலவுகள் | 50,000 |
| புகைப்பட இயந்திரக் கொள்வனவு | 190,000 |

(ஏனைய செலவுகள் வரித்தேவைக்காக சீராக்கத்துக்கு உட்படத்தேவையற்றவை (அனுமதிக்கக் கூடியவை) எனக் கொள்க.)

**வேண்டப்படுவது: பின்வருவனவற்றைக் கணிக்க:**

(அ) சிவாஸ்ரோஸின் சீர்செய்யப்பட்ட வியாபார இலாபம் (40 புள்ளிகள்)

(ஆ) மொத்த நியதிச்சட்ட வருமானம் (05 புள்ளிகள்)

(இ) மொத்த வரிமதி வருமானம் (05 புள்ளிகள்)

(ஈ) மொத்த வரிவிதி வருமானம் (05 புள்ளிகள்)

(ஈ) சிவரூபன் வ/ஆ 2012/2013 க்கு செலுத்த வேண்டிய வருமானவரி (05 புள்ளிகள்)

**(மொத்தம் 60 புள்ளிகள்)**

02. அரசாங்க வைத்தியராயிருந்து ஓய்வுபெற்ற Dr.சிறிநாத் என்பவர் “மெடிகிளினிக்” எனும் வைத்திய நிலையத்தை நடாத்தி வருகிறார். வ/ஆ 2012/2013 க்குரிய அவரது வருமானம் பின்வருமாறு:

| | ரூபா |
|---|---|
| ஓய்வூதியம் | 720,000 |
| நிபுணத்துவ சேவை வருமானம் | 650,000 |
| வைத்திய நிலைய (சீர்செய்யப்பட்ட) இலாபம் | 1,200,000 |
| விவசாய வருமானம் | 75,000 |
| | 2,645,000 |

இவர் வ/ஆ 2012/2013 க்குரிய வரியினையும் செலுத்தி உரியகணக்கு அறிக்கைகளுடன் வருமான வரித் திரட்டினை கடந்த 27.11.2013 அன்று உள்நாட்டு இறைவரித்திணைக்களத்துக்கு சமர்ப்பித்து அதற்கான உறுதிச் சீட்டையும் வைத்துள்ளார்.

எவ்வாறாயினும் கடந்த 01.09.2014 அன்று இவரது திரட்டுப் படிவம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றும் நிராகரிக்கப்படுகின்றது என்றும், காரணம் வாடகை வருமானம் வெளிப்படுத்தப்பட்டிக்கவில்லை என்றும் குறிப்பிடப்பட்ட ஒரு கடிதத்தையும் பெற்றுக்கொண்டார். அதில் இவ் அறிவித்தல் 2006 ஆம் ஆண்டு 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடு-163(3) இன் படியானது எனக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் ஒரு வரிமதிப்பீட்டு அறிவித்தலும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

இவ் வைத்தியர் தனது மனைவிக்கு உரித்தான ஒரு கட்டடத்தை மக்கள் வங்கிக்கு வாடகைக்கு கொடுத்துள்ளதாகவும், இது தமது திருமண நன்கொடையாகக் கிடைத்ததால் அவ் வருமானத்தை மனைவியே பெற்று அனுபவிப்பதாகவும் குறிப்பிடுகின்றார்.

மேற்படி வரிமதிப்பீட்டுக்கு எதிராக மேன்முறையீடு செய்ய விரும்பி உமது ஆலோசனையை கோரினால் “வலிதான மேன்முறையீடு” ஒன்று தொடர்பில் Dr.சிறிநாத்துக்கு வழங்கத்தக்க ஆலோசனையைக் குறிப்பிடுக.

**(20 புள்ளிகள்)**

03. சிறுகுறிப்பு எழுதுக.

(அ) தகைமை பெறும் செலுத்தல்களுக்கான விடுதொகை

(ஆ) சாதாரண வரி வீதம் மற்றும் விசேட வரி வீதம்

(இ) தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி

(ஈ) சுயவரி மதிப்பீட்டு தவணைக் கொடுப்பனவு முறையும் அதன் அனுகூலங்களும்

**(4 x 5 = 20 புள்ளிகள்)**